



ஓலை 163| ஓசை 286| மார்ச் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'கவிஞாயிறு' தாராபாரதி

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

## பொருள்

முயற்சி ஒருவருக்குச் செல்வத்தையும் மேன்மையையும் தரும். முயற்சி இல்லாமல் இருப்பது ஒருவரை வறுமையில் தள்ளிவிடும்.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மோன மென்பது ஞான வரம்பு!

பாவகை : இன்னிசைப் பஃறொடை வெண்பா

தென்றலும் மௌனத்தால் தேடிடும் பூக்களுமே
என்றுமே மௌனத்தை ஏற்குமே கன்றும்
பசுவின் மடியிலே பாலருந்த மௌனம்
கொசுவும் கடத்திடும் மௌனமே கொள்ளுமே!
ஆழ்கடல் மௌனம் அதுகொள்ள நீரினம்
ஆழ்ந்தே உறங்கும் அமைதியாய் பாழ்மனமும்
பாருமே மௌனமாய்ப் பாங்காய் உறங்கும்;
வேருமே மௌனத்தை வேண்டி ஊரும்
தவமிருக்கும்; மௌனத்தைக் தாங்கிடும் யாவும்
உவந்தமெய் ஞானம் உருபெற்று எவ்வுயிரும்
ஊறு விளைக்கா துயிர்வாழும் என்றே
பேறுமே வாய்ப்பதே பீடு!







**இலக்கணக் குறிப்பு:**

நான்கு நான்கு சீர்கள் அடி தோறும் பெற்று வந்த பன்னிரண்டு அடிகள் கொண்ட இன்னிசைப் பஃறொடை வெண்பா தான் மேலே உள்ளது. தனிச்சீரின்றி இரண்டிரண்டு அடிகளுக்கு ஓரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வந்ததாகும். வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் கலந்து வந்து சீருக்குச் சீர் காய் முன் நேர், நேர் முன் நிரை, நிரை முன் நேர் என்ற வெண்டளையில் செப்பலோசையுடன் வந்ததாகும். ஈற்றடியில் மூன்று சீர்கள் வந்து, ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் வந்து, கு, சு, டு, து, பு, று போன்ற எழுத்துகளில் ஒன்று பெற்று உகர ஓசையில் முடியும்.

# வாவி

பாவகை: வஞ்சிவிருத்தம்

ஊரின் நடுவிலே வாவி
நீரில் கயல்களின் துள்ளல்
வேரில் மிதந்திடும் பூக்கள்
சீரில் இயற்கையின் ஆட்சி.

அள்ளத் தங்கிடும் தண்மை
பள்ளம் வந்திடும் வெள்ளம்
உள்ளம் பெற்றிடும் இன்பம்
வெள்ளை கொக்குமே நிற்கும்

இயற்கை தந்திடும் நீர்நிலை
இயல்பாய் மேலெழும் தண்டும்
கயத்தில் பூத்திடும் அல்லி
அயர்வைப் போக்கிடும் சூழலே.



கவிஞர் செ. கலைவாணி

# ஒற்றை இறகு

கொஞ்சம் நீரும்,
நிறைய காற்றும்;
நிரம்பிவழியும்
பானையில் விழுந்து
நெடுந்தூரம்கடந்த வலியின்
துயரைத் தணித்துக்கொண்டது
பெயர்த்தெரியாத பறவையின்
ஒற்றை இறகு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# நஞ்சுக்கொடியில் சிக்கிக்கொண்ட பூமி

ஒரு வேளை சோற்றுக்காக
அவதி படும் ஏழை
மக்களின் வயிற்றில் அடிக்கும்
நவீன தொழில்நுட்ப கருவி
பல மணி நேரம்
மனிதன் செய்யும் வேலையை
சில நொடிகளிலே
ரோபோக்கள் செய்து முடிக்கிறது
நேரம் சேமிக்கப்படுகிறது
ஆனால்
சோம்பேறித்தனத்தின் விளைவில்
நோய்கள் கட்டுப்பாடின்றி
பரவி கொண்டிருக்கிறது
பன்மடங்கு நல்லது இருந்தாலும் கூட
சில தீமைகள் இருக்க தானே செய்யும்
அறிவியலின் தாக்கத்தால்
இயந்திரங்களின் கீழ் சிரமப்படும் பூமி
தன் வாழ்வாதாரத்தை
காப்பாற்றி கொள்ள முயலும்
மனிதர்கள்.



கவிஞர் மா.மோனிஷா

# விரயமாகும் விதைகள்

கணநேர இன்பத்தில்
தன்னிலை மறந்ததேனோ
கலைத்திடாது காத்து
ஈன்றதும் வீசியதேனோ

சிசு செய்திட்ட பாவம்
என்னவோ
ஆதரவற்று அனாதையாய்
வீதியில் கிடக்கிறதே

பசியால் துடிக்கிறதே
பாலுக்கு அழுகிறதே
ஐந்தறிவு அருகினில்
வரமாய் வருகிறதே

அமுதூட்டி உயிர்தனை
காத்து மகிழ்கிறதே
ஆறறிவு மனிதா
இழிச்செயல் ஏனோ

ஆதரவு தந்து
அரவணைத்து செல்வோம்
அன்பைப் பகிர்ந்து
பண்பால் உயர்வோம்

இரக்கம் கொண்டு
இன்னுயிர்தனைக் காத்திடுவோம்
தெளிந்த நீரோடையாய்
வாழ்வு மலரட்டும்



சொந்தமாகி சுகங்கள்
யாவும் காணட்டும்
மாற்றம் உண்டானால்
விடியலும் பூத்திடும்

வேதனை தீர்ந்தே
சாதனை படைத்திடட்டும்
விரயமாகும் விதைகள்
வீரியமாய் முளைக்கட்டுமே.

கவிஞர் செப. வெங்கட லட்சுமி காந்தன்

# தேர்தல்

அவர்கள் வருகிறார்கள்
ஜாக்கிரதை

முகம் தெரியாதவன் கூட
வணக்கத்தின் சொந்தக்காரனாய்

கரை வேட்டிகளின் மேடையில்
அரசியல் நாடகம் அம்மணமாய்

வண்ணங்களை தின்னும் கட்சி
கொடிகள் தெருவெங்கும் எச்சங்களாய்

ஏழ்மை என்றுமே அரைக்கம்பத்தில்
அவிழ்க்கப்பட்ட கோமணமாய்

புன்னகையின் பொய்கள் வாசல் தோறும்
வாக்குறுதிகளாய்

உயிரில்லா சின்னங்கள் உயிர்
உறிஞ்சும் அட்டைகளாய்

அவர்கள் வருகிறார்கள்
ஜாக்கிரதை



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தாவி கொடுத்த கை

எதிரிக்கும் நடக்கக்கூடாத
வேதனை ஒன்றுண்டு
உருகி உருகி காதலித்தவளின்
திருமண மேடையில் நின்று
முதல் காதலித்தவன் கையால்
தாலியை எடுத்துக் கொடுக்கும்
அந்தக் கொடுமை.
அது ஒரு செயல் அல்ல
உயிரின் உள்ளங்கையில் எழுதப்பட்ட
உருகும் உத்தரவு.
நினைவுகள் நெருப்பாய் நெஞ்சை நசுக்க,
நகைப்பின் பின்னால் நஞ்சு நின்றது.
கண்களில் கண்ணீர்
கலங்காமல் இருந்தது
ஆனால் உள்ளம் முழுவதும்
வெள்ளமாய் விழுந்தது.
அந்த பாவத்தையும் எனக்குத் தந்து
பழியையும் பரிசாய் போட்டு போனவள் நீ.
இப்போது மீண்டும் என் வாழ்க்கையின் வாசலில்
வந்து நிற்கிறாயே
காரணம் நீ கூறாயோ?
காதல் காயம் ஆறாதே
காலம் கடந்து போனதே தவிர.
கண்ணீரின் கரைகள் உலர்ந்ததே தவிர
காதலின் கருவறை காலியாகவில்லை.
நான் காத்திருந்தேன் என்று நினைத்தாயோ?
நான் மறந்துவிட்டேன் என்று நம்பினாயோ?
அல்லது நீயும் நொந்தாயோ? அடிப் பெண்ணே.
ஒரு மனதை இரண்டாக உடைத்தவள்
மீண்டும் அதே மனதில் இடம் கேட்கும் முன்
ஒரு கேள்விக்கு பதில் சொல்
இது காதலா? அல்லது
காயத்தின் மீதான இன்னொரு கையொப்பமா?



கவிஞர் இ. கேவர்மன், முல்லைத்தீவு

ஆழ மூச்செடுத்து
அன்று கடந்து போனதை
ஆயுசு வரை நினைக்க
ஆகாதென்று அடிமனதின்
ஆழத்தில் பூட்டி வைத்ததாய்
அறியாமல் பேதை அவள்
அலட்சியமாய் கடந்திட!
அழிந்திடாத அவலங்கள்
அவள் கண்ணெதிரே தினம் வந்து
ஆட்டம் போட! அந்நினைவுகளை
அடக்கி ஆள வழியில்லாமல்
அழுது கரைகிறாள்!
அணைத்து ஆற்றுப்படுத்த
ஆளில்லாமல் அவளை
அவளே தேற்றி எழ
ஆயுசு போதாது அவளுக்கு!
அடியோடு மறக்க இயலா
அர்த்தமற்ற நினைவுகள்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

தாய்மையின் மொழியாம் தாய்மொழி தமிழை
தூய்மையாய் காப்போம் துவளாத மனமாய்
சேய்மை நலனாய் சேர்ந்திடும் சிறப்பாய்
தாயின் அரவணைப்பில் தாங்கிடுமே எந்நாளுமே

பேசும் மொழிகள் பேதமாய் இருப்பினும்
வீசும் தென்றலாய் வீறுகொண்டு மகிழ்வோமே
தாய்மொழிப் பற்றை தரணியில் பரப்பி
தூய்மை உள்ளமாய் தூதுவிடுவோம் சிறப்பையே

அகிலம் ஆளும் அமைதியின் சிறப்பாய்
துகிலாய் காத்து துவளாமல் வாழ்வோமே
அனைத்திலும் தாய்மொழி அமைதியாய் சிறக்க
துணையாகக் காப்போம் துவளாத குணமாய்



சிந்தை சிதறாமல் சிறப்புற நடந்து
விந்தை வாழ்வில் வியப்பாய் காண்போம்
வேண்டிய மட்டும் உதவிகள் செய்து
தூண்டும் திரியாய் தூதனாய் இருப்போமே

எதிலும் தமிழாய் என்றும் வாழ்ந்து
புதிய சாதனைகள் புதிராய் படைப்போமே
வருங்காலம் வளமையில் வசதியாய் சிறக்க
பெருமை கொள்வோமே பெரிய சிந்தையாய்

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

திறனில்லா ஆட்சி தீரா வறுமை
உறுபகை சூழ உதிரும் நாடு.

ஒறுத்தல் பெருகி ஒப்புரவு தேய
மடியும் குமுகாயம்.



கவிஞர் ச. தமிழ்நேயன், தமிழ்நாடு

# மௌனமான வலிமை

மலராய் பிறந்து
முள்ளை மிதித்து வளர்ந்து
மழையாய் அழுது
சூரியனாய் தாங்கி நிற்கும்
அவளே — பெண்.

மகளாய் கனவுகள்
சகோதரியாய் பொறுப்புகள்
மனைவியாய் தியாகங்கள்
தாயாய் முடிவில்லா அன்பு.

விழிகளில் மௌனம்
இதயத்தில் போராட்டம்
புன்னகையில் வலி மறைத்து
வாழ்க்கையை அழகாக்கும் ஓவியம்.

நிலைகள் மாறினாலும்
நெஞ்சின் தைரியம் மாறாது
அவள் பெண்



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை



அன்பே! அலைக்கும் உனக்கும்
பொருத்தமுண்டு.
அலை கோபித்தாலும்
எல்லை தாண்டாது.

ஆண் அலை
பெண் அலை
எது என்று கண்டறிய முடியாது.
ஆனாலும்
ஓர் அலையை தொடர்ந்து
மற்றொரு அலை பாய்ந்து வரும்.

அது மன்னிப்பு கேட்டோ
தன் காதலை வெளிப்படுத்தவோ
புரியவில்லை.
இன்றுவரை.

அலை அலையாக வந்தாலும்
சேர்ந்து வந்தே கரையை முத்தமிடும்
நீயா? நானா?
பேதம் பார்க்காது
கரையை தாண்டாது உன் போல்

உன்னை நானும்
என்னை நீயும்
தொடர்ந்து காதல் செய்வோம்
உலகம் வாழும்வரை இணைந்திருப்போம்.

பொங்கி நிற்கும் ஆழி
தாங்கி நிற்கும் சுமைகள்
ஸ்பரிசம் தடவிய பொழுதுகள்
ஏங்குகின்றன தினம் தினம்.

கவிஞர் திருமதி. ஜீவனிந்ரா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

உங்கள் உலகத்தில்
நான் இல்லை
என் உலகத்தில்
நீங்கள் இல்லை
அதிலும்
என் உலகத்தில்
நானே இல்லை
என்பதுதான்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# கொலையும் தண்டனையும்

பிரிவின் போது
விளக்கம் சொல்லாமல்
இறுமாப்புடன்
விலகுவது கூட ஒரு வகை
கருணைக் கொலைதான்.
நட்புக்குவளையில்
நாக நஞ்சை கலக்கிய
நாணம் அற்றவர்க்கு.

முகம் சுளிக்காமல்
முன்னால் வந்து உதவியரை
மன்னிக்க மறுத்து
பிடிவாதத்தை பிடிமானமாக எண்ணி தன்
ஆத்மாவை தனிமையில் சுயவெறுப்புடன்
சுட்டெரிப்பது கூட
ஒரு வகை ஆணவக்கொலை தான்
இதயத்தில் ஈரம் இல்லாதவர்க்கு.



பாரிஜாத இதழ்களை
பரிதாப இதழ்களாக மாற்றி
குளிர் நிலவு கொஞ்சும் கண்களை
கொள்ளிக்கட்டைகளாக மாற்றி
வேண்டாம் என்று தள்ளிவிட்ட உறவை
பொது வெளியில் பார்க்கும் போது
கண்டும் காணாமல் போவது கூட
ஒரு வகை தற்கொலைதான்.
நன்றி மறந்த நல்லவர்களுக்கு.

திறக்கப்படாத கதவுகளுக்கு
முன் நின்று காத்திருப்பதும்.
திறந்தே இருக்கும் கதவுகளுக்கு முன்நின்று
நுழைய அனுமதி கேட்பதும்
ஒருவகை ஆயுள் தண்டனைதான்.
உதவியவரை உதறியவர்க்கு.

நீர் தந்த வரத்தை
வேர் அறியாமல் இருப்பதும்
வேர் வழங்கிய வளர்ச்சியை
மரம் மறந்து போவதும்
செய்நன்றிக்கு கிடைப்பது
ஒருவகை மரண தண்டனைதான்.
வசதி வந்ததும் வந்த பாதையை
வருத்தம் கொள்ள செய்பவர்க்கு.

கவிஞர் முனைவர். முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

# தமிழே! அமுதே!

பூமியின் நிசப்தப் பூட்டுக்கள்
உன்னால்தானே முதலில் உடைந்து போனது!
வகை வகையாய் உன்னிலிருந்து
உதிர்ந்த மொழிகள் அத்தனையும்
தன் வாய்ச்சவடலில்
வெறும் அணிகலனாய் மாறிப்போனது!

அவதரித்தெல்லாம் ஆடம்பரத்திற்காய் அணியமானதால்
முதல் மொழி உந்தன் மூச்சுக்காற்றெனும்
பரிமளத்தின் முன்னால்
மோதி உடையும் வெண்பனியானது
பிற மொழிகளின் கணக்குகள் அத்தனையும்!



தமிழே அமுதே
உன்னைப் பார்த்ததே போதுமென
உன்னைப் பருகாமலே
வானத்தின் வீதிகளில் மாணிக்கச் சலங்கைகட்டி
மகரந்த நடனத்திற்கு கால்கோளிட்டது
ஆதி நாளில் அந்தத் தென்குமரிக்காற்றும்!

அன்னைத் தமிழே
நீ அவதரித்த நாளிலிருந்தே
உன்னைப் பாடாத பொழுதெல்லாம்
வாழாத நாளின் வருகைப்பதிவேடனெக்
கபாடபுரம்;
தென்மதுரை;
மதுரையெனச் சங்கம் வைத்துத்
தமிழ் நெய்தே தம் பிறவிப்பயன் போக்கும்
பெரும் பணியெனச் செய்தனர் பாண்டிய வேந்தர்கள்!

தொல்காப்பியம்; நன்னூல்;
சிலப்பதிகாரம்; மணிமேகலை;
திருக்குறள்; நாலடியார்;
அகநானூறு; புறநானூறு;
மதுரைக்காஞ்சி; நெடுநல்வாடையென
அனேக ஆடைகளை நீ சூடியதால் தானே
இந்த அவனி முழுவதும் உழலும் மானிடர்களின்
ஆற்றாத் துயரங்கள் அத்தனையும் அவ்வப்போது
பொடியும் துகள்களாய் மாறிப்போனது!

ஊழிகள் பல உருண்டபோதும்
உந்தன் அடிமுடி தேடி
அடையும் தாகம் மட்டும்
இன்னும் இங்கு முடிந்தபாடில்லை
வற்றாத அமுதமாய் நீ சுரப்பதால்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

வெட்டப்பட்ட மரத்தின்
வெளியிலே கண்ணீராய்.

அடிபட்ட மனதின்
அடிவாரம் யாரறிவார்?

புரிந்தும் வெளியேறும்
புல்லின் மகுடமாய்.

ஆதவனின் விரிவில்
ஆறுதலாய் ஆறுகளாய்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# முதல் காதலே (வாழும் நினைவு)



பயணம் ஒன்றானது
திசையோ வேறானது.
இடம் மாறிய மனங்களை
இடம் மாற்றியது மணமேடை.

சந்தித்தோம் சிந்தித்தோம்
சிந்தைக்குச் சிதை வைத்தோம்.
இதய வாசலின் முதல் உறவே,
இமைக்கும் நொடியில்
சிதைந்த உணர்வே.

பார்வைத் துளி பட்டுத் தெறிக்க
பூத்ததொரு காதல் மொட்டு.
இதழ் மலரும் முன்னே
முறிந்தது இணைக் காம்பினை.

விட்டுச் செல்ல விரும்பவில்லை
விதியின் வினையால்
விலகிச் சென்றேன்.

பிடித்த கையை விட்டுவிட்டே
கொடுத்த கையை
பிடித்துக் கொண்டேன்.



மனம் மட்டும் இன்னும்
அதே கையில் தான்.
மீண்டும் காணும் காலம் வேண்டாம்;
எண்ணம் மீளா நினைவே போதும்.

தொலைத்து,
தொலைந்து போன
முதல் காதல் ஒன்று.
தொலையாமல் தொடரும்
யாவர் உள்ளிலும் இன்றும்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

குயிலின் குரல் மயிலின் அழகு
பெற்றிடும் பருவம்
அன்ன நடை கொண்டவள்
அவள் அழகு உணரப்படும் பருவம்

வையத்துள் மூழ்கி உணர்வுகளை
கொட்டிட துடிக்கும் பருவம்
தினம் தினம் கனவுகளை
நனவாக்க போராடும் பருவம்

சோதனைகளை சாதனைகள் ஆக்க
சோர்வு இல்லாது முயற்சிக்கும் பருவம்
கரம் பிடிக்கும் மன்மதன்
அவனை காண ஏங்கும் பருவம்

அவன் கரம் பிடித்து கரைகள் பல கடக்க
கோட்டை கட்டும் பருவம்
புது வாழ்வில் பதுமையாய் நுழைந்து
புதுமைகள் பல கண்டிட துடிக்கும் பருவம்

திருத்தப்பட்ட தவறுகள் அனுபவங்கள்
அதை உணர்த்தும் உன்னத பருவம்
மாந்தனே! இவை மலர்ப் பெண்ணின்
அழகிய பருவம்

இருபதின் தொடக்கத்தை
தொட முடியா ஒரு ஜீவன்
கழிந்த தன் காலத்தை
கற்பனையில் செதுக்கி.

சிற்பமாய் ஒரு காகித
காவியம் தந்துள்ளது.
சமர்ப்பிக்க மறந்த இம்மடந்தை
மடல் சமர்ப்பணம் ஆகட்டும்!



கவிஞர் ஹம்னா அக்பர்

மன்னித்து மன்னித்து
கண்ணீர் உறிஞ்சி
காதல் வெயிலில்
காயங்களெல்லாம்
காய்ந்துதிர்ந்து,
மென் நிழல் அணிந்து
மீண்டும் மீண்டும்
மொட்டுடைத்து
பூப்பூக்கவே
இந்த நேசம்
கண்மணி!



கவிஞர் மரு ஜஸீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# ஆதங்கம்

ஆயிரம் ஆதங்க அலைகள்
மனிதனின் மனத்தில்!
பள்ளு பாட விடாமல்
பங்கறையாய் மனதோரத்தில்!

மங்கையின் ஆதங்கம்; முக வசீகரம்!
இளைஞனின் ஆதங்கம் பணி நிரந்தரம்!
மாணவர்களின் ஆதங்கம், மதிப்பெண்கள்!
ஆசிரியரின் ஆதங்கம்,
மாணவர் முன்னேற்றம்!



பெற்றோரின் ஆதங்கம்,
பிள்ளைகள் கரையேற்றம்!
பாட்டியின் ஆதங்கம்,
ஊன்றுகோல் மேல்,
தாத்தாவின் ஆதங்கம்,
சொத்து பங்கீடு மேல்!

நடிகையின் ஆதங்கம்!
முன் நெற்றி வரை!
நடிகனின் ஆதங்கம்,
பட வெளியீடு நாள்!

பூசாரியின் ஆதங்கம்,
ஊர் திருவிழா!
யாசகனின் ஆதங்கம்,
அன்னதான நேரம்!

செல்வந்தரின் ஆதங்கம், சேமிப்பு!
வறியவரின் ஆதங்கம்
வயிற்றுப் பசி!

தலைவனின் ஆதங்கம்
ஆட்சிக்கட்டில்!
தொண்டனின் ஆதங்கம்,
தலைவனின் அங்கீகாரம்!
பாமரனின் ஆதங்கம்,
தன் பரிதாப நிலை!

முடிவில்லா ஆதங்கம்;
முறிந்து அழிந்து விடும்;
மன நிறைவு அடைய,
அலையில்லா ஆனந்த
பொய்கையாகும் மனது.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

மூதோர் சொல் வழி
முற்றும் நெறி தரும்
காலம் செப்பியது
காணும் நல் உண்மை.

மண் தந்த பொக்கிஷம்
மாறாத வாழ் நெறி
தோன்றும் தீயின்றி
தோன்றிய ஞானம் நிற்கும்.

வாயில் வந்த வாக்கு
மாற்றம் காணா செப்பு
நெஞ்சில் நன்மை விதை
நாடும் வாழ்வொளி தரும்.

பூமித் தாய் கொடை
போலும் பெரு நலம்
பாரின் நீதி வழி
பழங்கும் புது ஞானம்.

கவிஞர் திருமதி சினேஹா வினய்

# உலகில் விழித்திருக்கும் கண்கள்

உலகம் சுழல்கிறது உயிர்களும் வாழ்கிறது
உறவுகளில் உயிரில்லை உணவில் உயிர்ப்பில்லை
வாழ்வில் பற்றில்லை நினைவில் மாற்றமில்லை
பயணத்தில் தெளிவில்லை முடிவில் ஏதுமில்லை
மானுடம் செல்வதெங்கே! விதியை வெல்லவா!

விழிகளில் ஓர் போராட்டம் இமைகளில் ஓர் தயக்கம்
மனதினில் ஓர் ஏக்கம் இதயத்தில் ஓர் வேகம்
வாழ்வினில் ஏதும் நிலையில்லை
வாழ்ந்தாலும் ஏதும் நிம்மதியில்லை
வளர்ந்தாலும் ஏதும் கிடைப்பதில்லை

கலக்கத்தில் மனதினில் தெளிவில்லை
உலகத்தில் உயிரினில் உவகையில்லை
உயிர்கள் சாதித்தது ஒன்றுமில்லை
உயிர்பிரிந்த உடல் மாமிசமே
மண்ணரித்து மண்ணாகும் மாமிசம்!
மாம்சத்தின் கிரியைகள் எத்தனை

மாழும் நாள் அறியுமட்டும்!
மாயையான மனிதம்
வாழ்ந்திரு வாழுமட்டும்!
மனதில் தெளிவோடு
உலகில் நடைபோடு
மனதை தொலைக்காதே
பாதை உனக்கானதே
வா வா நண்பனே!

வாலிபத்தில் திடனோடு
முதுமையில் மகிழ்வோடு
பூவுலகினை கடந்திடு!
இமை நண்பன் வருகின்றேன்
விழியே சற்று ஓய்வெடு!
பகல் விருந்து காண!



கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா



உடைந்து போன உள்ளத்தை நினைத்து
வெள்ளமாகும் விழிநீரை வெளியேற்றாது இருக்க
அடக்கி கொள்ளவிழுங்கும் உமிழ்நீரைப்போல
உறவுகளையும் அள்ளி போட்டு
நினைவில் முக்கி எடுக்கையில் எப்படி மறந்தே போவது.

சாலையோர இல்லத்தில் சாத்தப்பட்ட ஜன்னல்களை கடந்தும்
போக்குவரத்து வாகனங்களின் சப்தம் வருவதைப்போல
தூக்கி எறிந்து மனக்குமறலை அள்ளி தெளித்து
முறித்து போன உறவை விட்டு வெளிவரவே மறுக்கும்
நினைவை எப்படி என்ன செய்ய முடியும்.

எதிர்வினையாற்றும் ஒன்றினை ஏற்றுவிட
விருப்பத்தேர்வும் நிர்ணயத்தை தொடுகிறது.
விருப்பமாய் எதிர்பார்த்து காத்திருக்கும்
நெடுநாள் தாமதிப்பும் சுகந்தம்தான்.

பசித்த போதும் ஓடுமீனை விடுத்து
பெரிதாய் எதிர்பார்த்து காத்திருக்கும் கொக்குக்கு
அதொன்று கவலையாக இருந்தாக தெரிவதே இல்லை.
அதே போல் காத்திருக்கும் நானொன்று
நஷ்டபடப்போவதாக தெரியவே இல்லை.

வயல் பரப்பில் வெட்டும் கால்வாயின்
கரடுமுரடுகள் வலித்தாலும் பெரிதாக தெரிவதில்லை.
அதே போலொரு நிலையில் நிற்கும் நானும்
சிக்கபட்டதாக நினைத்ததே இல்லை
பொறுத்து போகும் நிலையெலாம்
பருத்து வெடித்து சிதறும் பஞ்சு போல ஆகுவதே இல்லை.

நெஞ்சு கொள்ளும் எண்ணமும் எடை தாங்கிடும் துடிப்பில்
தலையனை நனைதலும் சாட்சியத்தேர்வை
இருளும் எடுப்பதே இல்லை.

அசைத்து பேசும் வார்த்தையில் விஷம் தடவும் மனம்
படைத்தோரை நசுக்கி போடுவதைப்போல
நினைத்து ஒதிங்கிக்கொள்ள வேண்டுமே
தவிர்த்து எதிர்வினை ஆற்றுவது நலமமன்று.


கவிஞர் சஞ்னாஸ் பேகம், முதலைப்பாளி புத்தளம் (இலங்கை)

# தேர்தல் என்னும் திருவிழா



தேர்தல் என்னும் திருவிழா
ஊரெல்லாம் பெருவிழா
ஐந்து வருடங்களுக்கு
ஒருமுறை வந்திடும்
விழா தேர்தல் என்னும் திருவிழா.

அரசியல் கட்சிகளின்
அதகள பிரச்சாரம்.
கலர் கலராய் கரை வேட்டி
விதவிதமா கட்சிக்கொடி
பரபரப்பா தொண்டர்கள்
துண்டுப்பிரசுரம் ஒலிபெருக்கி
விளம்பரம்.

எங்க ஊரு சுவரெல்லாம்
புது புது சின்னம் தாங்கி
*புது பொண்ணா* ஜொலிக்குது
யாருக்கு வாக்குன்னு
மக்கள் எல்லாம் குழம்புது.

அரசியல் தலைவர்கள் ஊரெங்கும்
பவனிதான் பிரச்சார பயணம்தான்.
வாக்காளரின் வீடு தேடி
வேட்பாளர்கள் மரியாதை
ஓட்டு போடும் மக்களையே
தெய்வமென கொண்டாடும்
அதிசய விழாதான் தேர்தல் என்னும்
திருவிழா தான்.

மக்களின் கடமையே வாக்குரிமை என்பது
வாக்கு செலுத்தும் கடமை
உயிரான உரிமையே.
ஒருவிரல் புரட்சியாய் ஒன்றாய்
உரிமை வென்றிடுவோம்.

ஜனநாயக உரிமையை நிறைவேற்றும் நேரமே
"மக்கள் சேவகர்களை" "சமூக ஆர்வலர்களை"
"கர்ம வீரர்களை " இனங்கண்டு மக்களே
தேர்ந்தெடுப்போம்.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# சிவசக்தி

தோள் சாய்ந்து
தன்னிலை மறக்கும்
தளிர் இடையாள்.

தாளாது வெட்கத்தில்
தலை குனியும் மலர் விழியாள்.

குவிந்த இதழில்
குரு நகை தவழும் வடிவுடையாள்.

இருவிழியில் ஒருமுகமாய்
இடப் பக்கம் இணைந்திருக்கும்
ஈசனின் பாதி சக்தி இவள்.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

கடினமான
காலங்கள்
மாற்றமின்றி
பிரசவிக்கின்றன
ஒப்பனையற்ற
நம்மை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# நிழலோடு உறவாடு!

ஒளிக்கதிர்கள் நம்மீது வீழ்கின்ற போதெல்லாம்
அளித்திடும் நிழலுருவை ஊமைத் தோழனாய்!
காலையில் நீளும்! மாலையில் குறையும்!
கால மாற்றங்கள் நிழலில் பிரதிபலிக்கும்!
ஒளிப்பகடையில் உயரம் கூடும்! அகலம்
குறையும்! உச்சிவெயில் நேரமென்றால் காலடியில்
தஞ்சம் புகும்! இருள்சூழும் பொழுதுகளில்
எங்கோ மறைந்துவிடும்! தன்னந்தனியாய் நடக்கையில்
தனிமைத் துயரில் உடன்தொடரும் வழித்துணையாய்!
விரல்களால் நிழலுருவை சுவற்றினில் உருவாக்க
மிருகங்களின் உருவங்கள் சிறுவர்களை மகிழ்விக்கும்!
மரங்களின் நிழல்கள் கோடையில் இளைப்பாற
வரங்களாய் அமைந்திடுமே! ஓடினால் உடனோடி
அமர்ந்தால் உடனமர்ந்து நிற்கையில் நிமிர்ந்தெழுந்து
கல்லோ, முள்ளோ, பள்ளமோ, மேடோ
எல்லாவற்றின் மீதும் படர்ந்து தொடர்ந்திடுமே!
ஒளிபோன்ற நேர்மறை எண்ணங்களைப் பற்றினால்
நிழல்போல் துணையாக நன்மைகள் தொடர்ந்திடுக்கும்!
உடலொடு நிழலும் நீங்கும் என்பது
நிலையாமை தத்துவத்தை எளிமையாய் உணர்த்திடுதே!
உடலுடன் நிழலும் நிலைகொண்டது என்றால்
போரில் வீழ்ந்தவனின் வீரத்திற்கு அடையாளம்!
அரசனின் நிழல் குடிகளுக்கு அரணாகும்!
பாலையில் நிழல் துன்பத்தின் குறியீடு!
காதலர் காத்திருப்பில் மரநிழலும் பாத்திரமாய்!
காதலன் மரமென்றால் காதலி படர்நிழலாய்!
நிழலோடு உறவாட நாமுணர்வோம் வாழ்வியலை!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# ஏந்துவோம் அன்பின் வேர்களை

காந்தியின் உடலுக்கும் மனதுக்கும்
காயங்களை விதைத்துவிட்ட
உங்களின் வஞ்சகத்தில்
குண்டுகள் வெடிக்கின்றன.
இன்னும் சில நாளில்
சிலைகளைப் பெயர்த்து விட்டு
துப்பாக்கிகளை நடப்போகிறது அரசின் போக்கு.
காந்தியின் புன்னகைகளைத் தாங்கும்
பணத்தாள்களை நீக்கிவிட்டு
கோட்சே புன்னகைக்கலாம்.
காந்தியின் உடலைத் துளைத்தவை
குண்டுகளென நினைக்கிறோம்
சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் மூன்றையும்
குத்திக்கிழிக்கும் அம்புகள் அவை.
இன்றும் மக்களை நோக்கி பாயக் காத்திருக்கும்
அரசின் குண்டுகளில் அமிலங்களே
ஒளிந்திருக்கின்றன.
விடுதலைக்காகப் போராடாத
காந்தியின் பின்னே திரண்டு விட்ட
கூட்டத்தைப் பார்த்து
தற்கொலை செய்துகொண்டாரென
வரலாறு திருத்தப்படும்.
கோட்சேக்களும் ராமன்களும்
ஆளுகின்ற தேசத்தில் குடிமகன்களுக்கு
கோமியமும் சாணமும் தேசிய உணவாக்கப்படலாம்.
சமத்துவத்தின் பிள்ளைகளென
இந்தியனாய் வாழ்பவர்கள் எல்லாம்
இந்துக்களாக முத்திரையிடப்படலாம்.
தேசத்தின் பிதாவென எழுதப்பட்டவையெல்லாம்
தேசத்துரோகிகளாக்கப்பட்டு
மன்னிப்புக் கடிதம் நீட்டியவரெல்லாம்
முன் நிறுத்தப்படும் காலமிது.



பிரிவினையின் பின்னே
தேசம் பிளவுறாமல் போகவேண்டி
தன்னையே கரைத்துக்கொண்ட
காந்தியின் கொள்கையெல்லாம்
கரையானுக்கு இரையாக்கும்
சட்டங்கள் நீள்கின்றன.
ஒற்றை மனிதனுக்குள் ஓராயிரம்
குணங்கள் ஒட்டியிருக்க
கற்றை இனங்களாய் கலந்திருக்கும்
மக்களுக்குள்
ஒரே மதத்தை ஒரே மொழியை
புகுத்துதல் பொருத்தமா?
மதங்களின் பெயர் படைத்து
மனிதத்தை புதைகுழியில் தள்ளப் பார்க்கும்
பிரச்சாரப் பொய்களை புறம் தள்ளி
கரங்களை இணைத்துக்கொள்வோம்
காட்சிகள் எப்போதும் நிலைப்பதில்லை
மாறும் போக்கினை மனதில் விதைத்திடவே
ஏந்திடுவோம் அன்பின் வேர்களை.

கவிஞர் இளையவன் சிவா

என்னவளின் ஆசையைய்
தொலைவில் பயணித்தே
நிறைவேற்றிவிட்டேன்,
ஆனால்
என்னுடன் எப்பொழுதுமே
அருகில் இருக்கவேண்டுமென்ற
அவளின் ஆசையைய்
எப்பொழுதுதான்
நிறைவேற்றபோகிறனோ !
அந்த கடவுளிடமே
கேட்டுக்கொண்டேன் எங்களின்
ஆயுளையாவது
கூட்டிதரச்சொல்லி
முணுமுணுத்தபடியே.

கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# சந்தித்த வேளை



சில்லென்ற
குளிர் காற்றினூடே

ஓயாது பொழிகின்ற
மழையின் நடுவிலே

திக் திக் என
இடைவிடாது ஒலித்திட்ட
இதய சப்தமும் இணைந்தே

இமைக்கா விழிகளுடன்
நம் இருவரின் விழிகளும்
இரண்டறக் கலந்தே

சந்தித்த வேளையோ
இன்றுவரை
நெஞ்சினில் பசுமையாய்



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மரணத்தின் மாயம்



அவள் யாக்கை மனம் இருந்தும்
மரண பின்னணியில்
யாரோ ஒருவரின்
ஒவ்வாமையில் அனுதினமும்
அடைக்கப்பட்ட சிறைபோல்
பறக்க மறந்த மாயைத் தோட்டத்தில்

தனிமையின் தாலாட்டில்
மீண்டும் ஒரு பிறப்பு
அவளை மறக்கத் தொடங்கி
மாற்றமில்லாமல்
மனம் கண்ட சுவை
அவளை ஆண்டு கொண்ட நிலை
அவள் கண்களில் மட்டும்
பயணங்களின் தொடக்கம் தினம்.

கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

## மூன்றில் ஒன்று

முடிவுக்கான தீர்வுக்கான
சிக்கல் விடுவிப்புக்கான

வாய்ப்புகளில்
இதுவா அதுவா என
ஒற்றையா? இரட்டையாவில்

நீண்ட யோசனைக்குபின்
தெளிவுகொண்டு
ஒன்றை தேர்வுசெய்வதோ

இல்லை
இந்தஎண்ணப்பயணத்தில்
மூன்றாம் பார்வையாய்
புதியது புலப்பட்டே
ஆகவேண்டும்.
***

## இந்த வார்த்தையாய்...

இரவு தீவிர
செய்பணி செய்யும்போது
மின்நிறுத்தில்



காலதாமதமான விழிப்போடு
பணிக்கு செல்லும்
பேரூந்தும் பழுதாகையில்

பின்தொடர்ச்சி தேவைப்படாத
பணி செய்பவரும்
முன்அறிவிப்பு இல்லா
விடுமுறை எடுக்காதவரின்
செயல் தேவைப்படுகையில்
பணிக்கு வராதபோது
சுத்தம்

மரத்தைப் பார்
வறட்சியைத் தாங்கும்
எண்ணம் வரும்.

சூரியனைப் பார்
சீக்கிரம் விழிக்கும்
எண்ணம் வரும்.

வானத்தைப் பார்
நட்சத்திரத்தை காக்கும்
எண்ணம் வரும்.

கடவுளைப் பார்
அடுத்தவரைக் காக்கும்
எண்ணம் வரும்.



கவிஞர் பகலவன்

கட்டுரை

## பிறப்பு, கல்வி



திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள குவளை என்ற சிற்றூரில், துரைசாமி-புஷ்பம் தம்பதியினருக்கு மகனாகப் பிப்ரவரி 26, 1947 அன்று பிறந்தார். தொடக்கக் கல்வியை குவளையில் பயின்றார், உயர் கல்வியை கீழ்க்கொடுங்காலூரில் நிறைவு செய்தார். இளங்கலை வரலாறு, முதுகலைத் தமிழ் பட்டம் பெற்றார். ஆசிரியர் பயிற்சிகளை ராணிப்பேட்டையிலும், சைதாப்பேட்டை கல்வியியல் கல்லூரியிலும் பயின்றார். மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பயிற்சியை மைசூரில் பெற்றார்.

## தனி வாழ்க்கை

கல்வியை முடித்ததும் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். ஆகஸ்ட் 22, 1974-ல், சந்தானலட்சுமியை மணம் செய்துகொண்டார். மகன்கள்: விவேகானந்தன், லோகுதுரை. மகள் :ஆண்டாள். அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் , கூடுவாஞ்சேரி போன்றவற்றில் 34 ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார்.

## இலக்கிய வாழ்க்கை

இளம் வயது முதலே கவிதை ஆர்வம் கொண்டவராக இருந்தார் தாராபாரதி. குறிப்பாக பாரதியின் கவிதைகள் இவரை வெகுவாக ஈர்த்தன. தன் பெயரில் உள்ள 'ராதா' என்பதைத் 'தாரா' என்று மாற்றியும், பாரதியின் மீது கொண்ட பற்றால் அப்பெயரை இணைத்தும் 'தாராபாரதி' என்ற பெயரில் கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

கட்டுரை

தாராபாரதியின் அனைத்துக் கவிதைகளையும் தொகுத்து 'கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்' என்ற பெயரில் இலக்கிய வீதி அமைப்பு வெளியிட்டுள்ளது.

## தாராபாரதி கவிதைகள்

**வெறுங்கை என்பது மூடத்தனம் - உன் விரல்கள் பத்தும் மூலதனம்!**

## கல்விப் பணிகள்

தாம் பணியாற்றிய பள்ளிகளில் மாணவர்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உழைத்தார். மாற்றுத் திறனாளி மாணவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தினார். அவர்களது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். மாணவர்கள், தங்களது பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தும் விதத்தில் பல போட்டிகளை அறிமுகப்படுத்தினார். புதிய பாடத்திட்டத்தின் உயர்மட்டக் குழுவில், ஆசிரியர் கையேடுகள் தயாரிப்பில், வினா வங்கி உருவாக்கத்தில் பங்கு பெற்றார். சென்னைத் தொலைக்காட்சியின் கல்வி ஒலிபரப்புகள், எல்லோர்க்கும் கல்வி, சான்றோர் சிந்தனை, கவிதைத்துளி, கவியரங்கங்கள், கவிதைப் பட்டிமன்றம், வள்ளுவர் காட்டும் வழி, காண்போம் கற்போம், வாழ்க்கைக் கல்வி எனப் பல சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுள்ளார். இவரது பணிகளைப் பாராட்டி சிறந்த ஆசிரியருக்கான 'டாக்டர் ராதாகிருஷ்ணன்' விருதைத் தமிழக அரசு அளித்துள்ளது. இவரது நினைவாக 'தாராபாரதி ஹைக்கூ விருது' ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. தமிழக அரசு இவரைப் பற்றிய கட்டுரைகளை பள்ளி மாணவர்களின் பாட நூலில் இடம் பெறச் செய்துள்ளது. இவரது கவிதைகள் சிலவும் பாட நூலில் இடம் பெற்றுள்ளன.

**நூல்கள்**

**கவிதை நூல்கள்**

- புதிய விடியல்கள்
- திண்ணையை இடித்துத் தெருவாக்கு
- பூமியைத் திறக்கும் பொன்சாவி
- விவசாயம் இனி இவர் வேதம் (வேளாண் செம்மல் புலம்பாக்கம் முத்துமல்லா வரலாறு)
- கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள்
- இது எங்கள் கிழக்கு
- விரல்நுனி வெளிச்சங்கள்
- இன்னொரு சிகரம்

**உரைநடை நூல்கள்**

- பண்ணைப்புரம் தொடங்கி பக்கிங்காம் வரை
- வெற்றியின் மூலதனம்

**விருதுகள்**

- முதல் பரிசு - கல்லூரிக் கவிதைப்போட்டி (1976)
- வெள்ளிப் பதக்கம் - கல்லூரிக் கட்டுரைப் போட்டி
- தங்க மோதிரம் - தமிழ் எழுத்தாளர் சங்கம் (வாசவன் விருது 1990)
- கண்ணதாசன் நினைவு விருது (இலக்கியவீதி 1990)
- சென்னை வாணுவம் பேட்டை திருவள்ளுவர் இலக்கிய மன்றம் வழங்கிய கவிஞாயிறு விருது (1993)
- தமிழக அரசு வழங்கிய நல்லாசிரியர் விருது

**மறைவு**

மே 13, 2000 அன்று கவிஞர் தாராபாரதி காலமானார். அவரது மறைவிற்குப் பின் தமிழக அரசு அவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கியுள்ளது.

நாளை

# நமதே

## நம்மிடம் இருப்பது

## இந்த நொடி

## மட்டும்தான்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com